

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி ஈரோடு மாநகரம் 42வது வார்டில் கழக அரசின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி கூறி வீதி, வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்எல்டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவகுமார், முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாசலம், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், மேயர் நாகரத்தினம், இமயம் சிவக்குமார், வடிவேல்ராமன், கருப்புசாமி, தலைமை கழக பேச்சாளர்கள் பவானி கண்ணன், ஈரோடு இளைய கோபால், மாமன்ற உறுப்பினர் புவனேஸ்வரி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.



கோவில்பட்டி வ.உ.சி. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா மற்றும் ஆண்டு விழாவில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும்,தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான திருமதி பெ.கீதாஜீவன் கலந்து கொண்டு உரையாற்றி மரக்கன்றுகள் நட்டு வைத்தார். உடன் முதன்மை கல்வி அலுவலர் கணேசமூர்த்தி, மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) பிரபாகரன்,பள்ளி தலைமை ஆசிரியர் சேகர் மற்றும் கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கருணாநிதி,கோவில்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

# இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் - அண்ணா சிலைக்கு மரியாதை!

## கழகத்தினருக்கு – மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி வேண்டுகோள்!



சென்னை, பிப். 2-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி மாலை அணிவித்து மரியாதை செய்திட வேண்டும் என கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர். தன் பேச்சால், எழுத்தால், தமிழ் மக்களை ஒருங்கிணைத்து தமிழ் மக்களிடையே பேரெழுச்சியை உண்டாக்கிய மாமேதை, தமிழர்க்கென திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட மகத்தான தலைவர். இவர்கள் விதைத் திட்ட கொள்கைகள், கோட்பாடுகள் தழைத்தோங்கி, விருட்சமாகி இன்று தமிழன் என்கிற உணர்வு மேலோங்கி நிற்க செய்த மகத்தான தலைவர், கழகம் கண்ட காவிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவு தினம், நாளை (பிப்ரவரி 3-திங்கட்கிழமை) காலை இராணிப்பேட்டை மாவட்டம் தோறும் பேரறிஞர் அண்ணா சிலைகளுக்கும், திருவுருவப் படங்களுக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்திட வேண்டும்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், முன்னோடிகள், மாவட்ட நகர, ஒன்றிய, பேரூர் அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் அவரவர் பகுதியில் அறிஞர் அண்ணா சிலைகளுக்கும், திருவுருவப் படங்களுக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்திட வேண்டும். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி கழக செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, தொண்டர் அணி, வழக்கறிஞரணி, விவசாய அணி, வர்த்தகரணி, சுற்றுச்சூழல் அணி, நெசவாளரணி, ஆதிதிராவிட நலக்குழு, சிறு பான்மை நலப்பிரிவு மருத்துவரணி, பொறியாளரணி, விவசாய தொழிலாளரணி, மகளிர் தொண்டரணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி, தகவல் தொழில்நுட்ப பிரிவு, ஓட்டுநர் அணி, அயலக அணி மற்றும் தொ.மு.ச.வினர் சார்ந்த நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும்.

எனவே மாவட்டம் முழுவதும் உள்ள நகர, ஒன்றிய, பேரூர் மற்றும் வார்டு ஊர்கிளை, உட்கிளை தோறும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### அண்ணா நினைவு நாள்! கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ.பெரியசாமி தலைமையில் திண்டுக்கல்லில் அமைதிப் பேரணி!

# திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டத்தினர் திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் வேண்டுகோள்!





திண்டுக்கல்,பிப்.2-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர் தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளான நாளை (03.02.2025, திங்கட்கிழமை) காலை 9.00 மணியளவில் கழக துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி, அவர்களின் தலைமையிலும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் உணவுத் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி MLA., திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான I.P.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காந்திராஜன் ஆகியோரின் முன்னிலையில் மாநகராட்சி அலுவலகம், மணிக்கூண்டிலிருந்து அமைதிப் பேரணியாகச் சென்று பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர மேயர், துணை மேயர், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்கள், பேரூராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள், பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு மற்றும் கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னாள் உள்ளாட்சிமன்றப் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

### அண்ணா நினைவு நாள்: வாடிப்பட்டியில்

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, பிப். 2-

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வருகிற மூன்றாம் தேதி வாடிப்பட்டியில் பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு அமைதிப் பேரணி நடத்தி அவரது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர் - வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு போதித்தவர், எல்லோராலும் பேரறிஞர் அண்ணா என்று போற்றப்படுபவர், தமிழர்களுக்காகவும், தமிழுக்காகவும் பெரும் தொண்டாற்றியவருமான அறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (03.02.2025 திங்கள்கிழமை) மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாடிப்பட்டி பேருந்து நிலையம் முன்பாக அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்திடும் நிகழ்வு காலை 10 மணி அளவில் நடைபெற உள்ளது. முன்னதாக வாடிப்பட்டி மதுரை மத்திய கூட்டுறவு வங்கி கிளை அலுவலகம் முன்பாக இருந்து அமைதி பேரணி புறப்பட உள்ளது எனவே இந் நிகழ்வுகளில் மதுரை வடக்கு மாவட்ட திமுகவுக்குட்பட்ட மாவட்டக் கழக, மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலமாக கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# நீலகிரியில் - அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி!

## கழகத்தினருக்கு – மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!



நீலகிரி, பிப். 2-

நீலகிரி மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவுநாள் அன்று கழகத்தினர் அனைவரும் தவறாது மரியாதை செலுத்திட மாவட்ட செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

அறிவுலக மேதை, திராவிட இயக்க ஆசான், தி.மு. கழக நிறுவனர், பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவுநாள் பிப்ரவரி 3ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் வழிநின்று அண்ணாவின் கொள்கை கோட்பாடுகளை துளியும் பிசகின்றி காத்து அவர் உருவாக்கிய திராவிட முன்னேற்ற கழக பேரியக்கத்தை கோடிக்கணக்கான தொண்டர்களையும், அனுதாபிகளையும் கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் வழிநடத்தி வந்தார்கள். முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழிநின்று செயல்படும் கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் அறிவுரைப்படி பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவுநாளை ஒவ்வொரு கழக தொண்டனும் அனுசரித்திட வேண்டும்.

அதன்படி நீலகிரியில் நாளை (03.02.2025 - திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் குன்னூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு குன்னூர் நகர கழக அலுவலகத்திலிருந்து மவுன ஊர்வலமாக சென்று கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவர், தொடர்ந்து காலை 11 மணியளவில் மாவட்ட கழக அலுவலகம் உதகை கலைஞர் அறிவாலய முகப்பிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளனர்.

மேலும், கொணவாக்கரை, பெங்காம் ஆகிய பகுதிகளிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மற்ற இடங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ படங்களுக்கு மாலை அணிவித்தும் மௌன அஞ்சலி செலுத்திட அனைத்து கழக தோழர்களையும் வேண்டுவதோடு, இதற்கான ஏற்பாடுகளை தொடர்புடைய நகரஒன்றியபேரூர்- கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சிறப்புடன் செய்திட அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன். அண்ணா வழியில் அயராது உழைப்போம்..!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறிப்பிட்டுள்ளார்.

### ஈ.சி.ஆர். விவகாரம் :

# கைதான 4 பேரும் புழல் சிறையில் அடைப்பு!

சென்னை, பிப். 2–

சென்னை கிழக்கு கடற்கரை சாலை விவகாரத்தில் கைது செய்யப்பட்ட 4 பேரையும் 14 நாட்கள் காவலில் அடைக்க, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனிடையே, தலைமறைவாக இருந்த மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் பெண்கள் சென்ற காரை பின் தொடர்ந்து சென்ற விவகாரத்தில் 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வழக்கு தொடர்பாக, கல்லூரி மாணவர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் தொடர்புடைய சந்துரு என்பவர் மீது ஏற்கனவே ஆள் கடத்தல், ஏமாற்றுதல் ஆகிய 2 வழக்குகள் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட 4 பேரையும் 14 நாட்கள் நீதிமன்ற காவலில் அடைக்க சோழிங்கநல்லூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, 4 பேரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர். இதனிடையே, தலைமறைவாக இருந்த மேலும் ஒரு நபரை தனிப்படை போலீசார் கைது செய்துள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், சாலவாக்கம் ஊராட்சியில், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 42.80 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக் கூட்டத்தினை காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளரும், உத்திரமேரூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான க.சுந்தர் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார், இந்நிகழ்ச்சியில் சாலவாக்கம் ஒன்றிய கழகச் செயலாளர் தி.குமார், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.ஆர்.வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. எஸ்.பி.வி.எஸ்.சத்யா சக்திவேல், துணைத் தலைவர் நந்தா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஜி.சிவராமன், ஒன்றிய குழு உறுப்பினர் சேகர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், திருமதி.சங்கீதா பழனி,திருமதி.சசிகலா வெங்கடேசன், மற்றும் கழக நிர்வாகிகள் ஐ.ஹரிபாபு, பாண்டியன், திருமதி. இரத்தினமாலா, பி.வி.அழகப்பன், அ.தர்மராஜ், பாஸ்கர், சு.முரளிதரன், செ.விஷ்ணு, பழவேரி முருகன், ஜெயபுரி, நாகராஜ்,மற்றும் கழக நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


